# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ம் தேதி பிற்பகல் 03.00 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

---

பொருள்–1

செங்கல்பட்டு நகராட்சி முதல் நிலை நகராட்சியாகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வீடுகளின் எண்ணிக்கை 16818 ஆகும். மக்கள் தொகை 67272 ஆகும். இந்நகராட்சி மாவட்ட தலைநகரத்தில் அமைந்துள்ளது. தற்போது வளர்ந்து வரும் நகராட்சிகளில் செங்கல்பட்டு நகராட்சியும் ஒன்றாகும். இந்நகராட்சியில் 6.09 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 33 வார்டுகளை உள்ளடக்கிய நகராட்சி ஆகும். மேலும், மொத்தம் 43.934 கி.மீ நீளமுள்ள சாலைகள் மற்றும் 32.80 கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் இந்நகராட்சியால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்நகராட்சியில் மாவட்ட ஆட்சியரகம், நீதிமன்றம், 12 எண்ணிக்கையில் உயர்நிலை பள்ளிகள், தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள், கல்லூரிகள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், போக்குவரத்து பணிமனை, இரண்டு இரண்டாம் நிலை பேருந்து நிலையம், ஒரு முதல் நிலை தினசரி சந்தை, மாவட்ட தலைநகர மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரி, அனைத்து துறை சார்ந்த அரசு அலுவலகங்களும் உள்ளடக்கிய மாவட்ட தலைநகர நகராட்சி ஆகும். இந்நகராட்சி பகுதிக்கு அன்றாடம் வந்து செல்லும் (Floating Population) மக்கள் தொகை நாளொன்றுக்கு சுமார் 30000 நபர்கள் ஆகும்.

இந்நகராட்சியில் 263 துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது 93 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். தற்போது வாகனம் மற்றும் பேட்டரி வாகனங்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள உள்ளதாலும், வாகனம் இயக்குதல், உரக்குடில்கள் பராமரித்தல், மழைநீர் மற்றும் கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்தல் பணிக்கு 77 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகிறது. இப்பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விலைவிகிதத்தின் அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளவும், அதற்காக செலவினம் ரூ.133.99 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் நிர்வாக அனுமதி பெற பிரேரணையினை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 607/2021/எச்1)

**தீர்மான எண்.1210, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26728/P3/2017 நாள்.20.12.2017–ன் படி 56 எண்ணிக்கையிலான பணியாளர்களை வெளிகொணர்வு முறையில் தனியார் ஒப்பந்தம் மூலம் நியமனம் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பந்தபுள்ளிகள் கோரி இந்நகர் மன்ற தீர்மான எண்.359/ நாள்.22.3.2018 –ன் படி ஒப்புதல் பெற்று செயல்படுத்தப்பட்டது.

இந்நிலையில் இந்த ஒப்பந்தம் 28.02.2021–ம் தேதியுடன் முடிவடைய உள்ளதாலும் தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தல் 2021 நடைபெற உள்ளதாலும் தேர்தல் நன்னடத்தை விதி எந்த நேரத்திலும் அமுலில் வர உள்ளதாலும் அவசர அவசியம் கருதி பொது மக்களின் நலன் கருதியும் இப்பணியினை ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மெர்ஸஸ் ரிலையான் பெசிலிட்டி சர்வீஸ் (பி) லிட் மூலம் மேலும் மூன்று மாதங்களுக்கு (1.3.2021 முதல் 3.5.2021) வரை பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.22.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–
மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1211, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–3

செங்கல்பட்டு நகராட்சி சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்தேக்க தொட்டியிலிருந்து நகரின் பிரதான மேல்நிலை தொட்டிக்கு நீரேற்றும் பணி செய்ய வேண்டிய 60 HP Submersible motor காயில் பழுது நீக்கி பொருத்து பணிக்கான ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் ஆணையர் மற்றும் தனி அலுவலர்அவர்களின் அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டு 24.02.2021–ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | விலைவிகிதம் மதிப்பீட்டு விலை விகித்தின் படி விவி குறைவு/கூடுதல் |
|---|---|---|---|
| 1 | திரு.கே.ராஜகோபாலன் ஒப்பந்ததாரர் செங்கல்பட்டு | ரூ.1.18 | 0.48% சதவிகிதம் குறைவு |
| 2 | திருவாளர்.அப்பல்லோ எண்டர்பிரைசஸ் | | 2.80% சதவிகிதம் அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| | மறைமலைநகர் | | |

(ந.க.எண்.2514/2021/இ2)

அ.கு–

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளிகள் வழங்கியுள்ள திரு.கே.ராஜகோபாலன் ஒப்பந்ததாரர், செங்கல்பட்டு என்பவரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1212, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–4

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரையுள்ள குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய் உடைப்புகள் சரி செய்யும் பணி 2021–22–ம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தபுள்ளிகள் கோரி விநியோகம் செய்யும் பணிக்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | விலைவிகிதம் மதிப்பீட்டு விலை விகித்தின் படி விவி குறைவு/கூடுதல் |
|---|---|---|---|
| 1 | திருவா.M/S குமரன் எலக்டிரிகல்ஸ் நிறுவனம் செங்கல்பட்டு | ரூ.9.00 | 0.03% சதவிகிதம் குறைவு |
| 2 | M/S SMK என்டர்பிரைசரஸ் நிறுவனம் மறைமலைநகர் | | 1.68% சதவிகிதம் அதிகம் |

(ந.க.எண்.186/2021/இ2)

அ.கு–

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளிகள் வழங்கியுள்ள திருவா.M/S குமரன் எலக்டிரிகல்ஸ் நிறுவனம் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1213, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–5

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றம் நிலையத்தில் ஆற்றின் படுகையில் கிணறு மற்றும் போர்வெல் பகுதியில் உள்ள மின்மோட்டார், பைப் லைன் கேபிள், ஸ்டார்டர் மின் உதிரிப்பொருள் பழுது சரி செய்யும் 2021–22 ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தபுள்ளிகள் கோரி விநியோகம் செய்யும் பணிக்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டு 26.02.2021–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | விலைவிகிதம் மதிப்பீட்டு விலை விகிதன் படி விட குறைவு / கூடுதல் |
|---|---|---|---|
| 1. | திரு.கே.ராஜகோபாலன் ஒப்பந்தாரர் செங்கல்பட்டு | ரூ.9.80 | 0.89% சதவிகிதம் குறைவு |
| 2. | திருவாளர் அப்பல்லோ எண்டர்பிரைசர்ஸ் மறைமலை நகர் | | 2.91% சதவிகிதம் அதிகம் |

அ.கு–

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளிகள் வழங்கியுள்ள திரு.கே.ராஜகோபாலன் ஒப்பந்தாரர், செங்கல்பட்டு என்பவரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.186/2021/இ2)

**தீர்மான எண்.1214, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–6

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான திம்மாவரம் தலைமை நீரேற்றம் நிலையத்தில் உள்ள மின்மோட்டார், பைப்லைன், கேபிள், மின் உதிப் பொருட்கள் பழுது சரிசெய்யும் பணிக்கு 2021–22–ம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தபுள்ளிகள் கோரி விநியோகம் செய்யும் பணிக்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்காக மேற்கொண்டு 26.02.2021–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | விலைவிகிதம் மதிப்பீட்டு விலை விகிதன் படி விட குறைவு / கூடுதல் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவாளர் அப்பல்லோ எண்டர்பிரைசர்ஸ் மறைமலை நகர் | ரூ.5.00 | 0.07% சதவிகிதம் குறைவு |
| 2. | திரு.ஆனந்த் எண்டர்பிரைசரஸ் செங்கல்பட்டு | | 0.12% சதவிகிதம் அதிகம் |

அ.கு–

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் அப்பல்லோ எண்டர்பிரைசர்ஸ் மறைமலை நகர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.186/2021/இ2)

**தீர்மான எண்.1215, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–7

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பாசித் தெரு நீர்தேக்க, பெரியணியக்கார தெரு, சப் கலெக்டர் பங்களா, நீர்தேக்க தொட்டிகளில் KK தெரு பூஸ்டர் மற்றும் தட்டான்மலை நீர் உந்து நிலையம் ஆகியவற்றில் உள்ள மின்மோட்டார்கள், பைப்லைன், கேபிள், ஸ்டார்டர், மின் உதிரிப் பொருட்கள் பழுது சரி செய்யும் பணி 2020–21–ம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தபுள்ளிகள் கோரி விநியோகம் செய்யும் பணிக்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டு 26.02.21–ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **விலைப்புள்ளிகள் பெயர் மற்றும் முகவரி** | **மதிப்பீடு தொகை (இலட்சத்தில்)** | **விலைவிகிதம் மதிப்பீட்டு விலை விகிதன் படி விட குறைவு / கூடுதல்** |
|---|---|---|---|
| 1. | திருவாளர் அப்பல்லோ எண்டர்பிரைசர்ஸ் மறைமலை நகர் | ரூ.6.00 | 0.03% சதவிகிதம் குறைவு |
| 2. | திரு.ஆனந்த் எண்டர்பிரைசரஸ் செங்கல்பட்டு | | 0.36% சதவிகிதம் அதிகம் |

அ.கு–

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் அப்பல்லோ எண்டர்பிரைசர்ஸ் மறைமலை நகர் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.186/2021/இ2)

**தீர்மான எண்.1216, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–8

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி தலைமை நீரேற்றும் நிலையத்தில் ரேடியோமலை மற்றும் TWAD Board நீர்தேக்க தொட்டியில் செல்லும் பைப்லைன் மற்றும் மின்மோட்டார்கள் பழுது சரி செய்யும் 2021–22 ம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தபுள்ளிகள் கோரி விநியோகம் செய்யும் பணிக்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்காக மேற்கொண்டு 26.02.2021–ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | விலைவிகிதம் மதிப்பீட்டு விலை விகிதன் படி விட குறைவு / கூடுதல் |
|---|---|---|---|
| 1. | திருவாளர் அப்பல்லோ எண்டர்பிரைசர்ஸ் மறைமலை நகர் | ரூ.9.80 | 0.02% சதவிகிதம் குறைவு |
| 2. | திரு.ஆனந்த் எண்டர்பிரைசரஸ் செங்கல்பட்டு | | 0.36% சதவிகிதம் அதிகம் |

அ.கு–

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் அப்பல்லோ எண்டர்பிரைசர்ஸ் மறைமலை நகர் என்பவரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.186/2021/இ2)

**தீர்மான எண்.1217, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–9

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 33 வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறு, சிறுமின்விசை பம்புகள் பழுது சரிசெய்யும் பணி 2021–22 ம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தபுள்ளிகள் கோரி விநியோகம் செய்யும் பணி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டு 26.02.2021–ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிகள் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | விலைவிகிதம் மதிப்பீட்டு விலை விகிதன் படி விட குறைவு / கூடுதல் |
|---|---|---|---|
| 1. | திருவாளர் குமரன் எலக்டிரிக்கல்ஸ் செங்கல்பட்டு | ரூ.6.00 | 0.02% சதவிகிதம் குறைவு |
| 2. | திருவாளர் SMK எண்டர்பிரைசரஸ் மறைமலை நகர் | | 1.91% சதவிகிதம் கூடுதல் |

அ.கு–

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தபுள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் குமரன் எலக்டிரிக்கல்ஸ் நிறுவனம் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.186/2021/இ2)

**தீர்மான எண்.1218, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–10

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோக வாகனம் (லாரி) எண்.TN 19 F 1668 F.C காலம் முடிவடைய உள்ளதால் F.C செய்ய வாகனம் பழுது நீக்கம் செய்து உத்தேச செலவினம் ரூ.1.80 இலட்சம் ஆகும் குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை செய்ய மன்ற ஒப்புதலுக்கு.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.
3. குடிநீர் விநியோக அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1219, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–11

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோக லாரி எண்.TN 19 F 1668 FC செய்ய 26.02.2021 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியின் விவரம்

1. M/S சக்திபாடி ஒர்க்ஸ் பூந்தமல்லி – ரூ.1,79,500/–

2. M/S செந்தில் முருகன் ஒர்க்ஸ் சென்னை–56 – ரூ.1,85,150/–

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ரூ.1,79,500/– யை M/S சக்திபாடி ஒர்க்ஸ் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கு.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1220, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–12

செங்கல்பட்டு நகராட்சி கனிமம் மற்றும் சுரங்கம் நிதி 2020–2021–ம் குடிநீர் விநியோகப் பணி செய்ய ரூ.20.00 இலட்சம் நிதி ஒதிக்கீடு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு அவர்கள் செயல்முறைகள் ந.க.எண்.8218/mines/2021, நாள்.17.02.2021–ன் படி ஒதிக்கீடு செய்து நிர்வாக அங்கிகாரம் வழங்கப்பட்டதனை தொடர்ந்து இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண்.264/2021/இ1, நாள்.17.02.2021–ன் படி 24.02.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள்

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து காஞ்சிபுரம் நெடுஞ்சாலை வரை (விடுப்பட்ட பகுதி) வழி புற வழிச்சாலை 250mm D.I குழாய் பதித்தல் பணி | ரூ.20.00 இலட்சம் | 1) திருவா.அப்பல்லோ எண்டர்பிரைசஸ் | 0.04% குறைவு |
| | | | 2) திருவா.ஆனந்த் எண்டர்பிரைசஸ் | 0.21% அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த 0.04% திருவா.அப்பல்லோ எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

அ.கு–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) திட்டம் மற்றும் குடிநீர் பணி என்பதால் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1221, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–13

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் பணிகள் செய்ய 15–வது நிதிக்குழு மான்ய நிதி (2020–21) திட்டத்தில் செயல்படுத்தி இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண்.2357/2020/இ1, நாள்.02.02.2021–ன் படி 19.02.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி கீழ்கண்டவாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>I. குடிநீர் பணி</u> பழவேலி நீரேற்று நிலையத்திலிருந்து காஞ்சிபுரம் நெடுஞ்சாலை வரை (வழி) பைபாஸ் சாலை பாசித் தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்காக 250mm D.I பிரதான குழாய் பதித்தல் பணி | ரூ.50.00 இலட்சம் | 1) M/S குமரன் எலக்ட்ரிகல்ஸ் | 0.01% ம.வி.கு |
| | | | 2) திரு.L.புண்ணியகோட்டி | 0.07% ம.வி.அ |
| 2 | பழவேலி நீரேற்று நிலையத்திலிருந்து காஞ்சிபுரம் நெடுஞ்சாலை வரை (வழி) பைபாஸ் சாலை ரேடியோ மலை திட்ட நீர்த்தேக்க தொட்டிக்காக 250mm D.I பிரதான குழாய் பதித்தல் பணி | ரூ.36.20 இலட்சம் | 1) M/S குமரன் எலக்ட்ரிகல்ஸ் | 0.027% ம.வி.கு |
| | | | 2) திரு.L.புண்ணியகோட்டி | 0.06% ம.வி.அ |

அ.கு–

1. குறைவு ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. திட்டப் பணி மற்றும் குடிநீர் பணி என்பதால் தனி அலுவலர் நகர் மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1222, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–14

அரசு ஆணை (நிலை) எண்:170 நாள்:27.10.2020 ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களை பட்டியலினை கணக்கு எடுத்து அதன் விவரத்தினை இணைதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டி இந்நகரில் உள்ள பதிவு பெற்ற நிறுவனங்களின் இடமிருந்து 11.11.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. வேதா எண்டர்பிரைசஸ் – (i) படிவம் அச்சடித்தல் – 4.90

(ii) தகவல் சேகரிப்பு பணி – 4.90
(iii) இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் – 4.90

——————
14.70
——————

2. எஸ்.எம் கண்சல்டன்சி– (i) படிவம் அச்சடித்தல் – 4.95
(ii) தகவல் சேகரிப்பு பணி – 4.95
(iii) இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் – 4.95

——————
14.85
——————

3. சாய் சீனிவாசா ஜெராக்ஸ் – (i) படிவம் அச்சடித்தல் – 5.00
(ii) தகவல் சேகரிப்பு பணி – 5.00
(iii) இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் – 5.00

———————
15.00
———————

மேற்படி மூன்று விலைப்புள்ளிகளையும் வரிசையில் ஒன்றில் கண்டுள்ள விலைப்புள்ளி மற்ற விலைப்புள்ளிகளை விட குறைவாக இருப்பதால் இதனை ஏற்று பணி உத்திரசு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1) அனுமதி வழங்கலாம்
2) அவசர அவசியத்தின் நிமித்தம் மன்ற ஒப்புதளை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கிகரிக்கலாம்.

**தீர்மான எண்.1223, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–15**

செங்கல்பட்டு நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள **16248** வீடுகள் **33** வார்டுகள் மற்றும் காலிமனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள் நாள்பட்ட மக்கள் பயன்பாட்டில் இல்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய குடியிருப்புகள், கோயில்கள் மசூதிகள், சர்ச் மற்றும் இதர அரசு மற்றும் அசு சார கட்டிடங்கள், கல்வி கூடங்கள் இன்னும் பிற இடங்கள் கொசு புழுக்கள் உற்பத்தியினை டெங்கு, சிக்கன்குனியா, மலேரியா, யானைகால் போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகனை தடுக்கும் விதமாக DBC பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆணைப்படி மாவட்ட ஆட்சியர் அவர்களின் விலை விகிதத்தில் மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள M/S AMR Electrical Engineering works, வேலூர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மூன்று மாதங்களுக்கு மன்ற தீர்மானம் எண்.**1180** மன்ற ஒப்புதல் பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S AMR நிறுவனத்திற்கு **10.11.2020** முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி நிறுவனத்தில் ஒப்பந்த காலம் **10.02.2020**–ம் தேதியில் முடிவடைகிறது. இந்நிலையில் டெங்கு காய்ச்சல் மற்றும் கொரோனா தடுப்பு பணி மிக முக்கிய பணி அத்தியாவசிய பணி என்பதால் நோய் தொற்று ஏற்படாமல் பொது சுகாதார பணியை பாதுகாக்க வேண்டி இப்பணியினை அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் (ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு ரூ.**460/–** ESI, EPE, Service tax உட்பட) தொடர்ந்து அடுத்த மூன்று மாதங்களுக்கு ஈடுபடுத்திடவும் அதற்கான செலவின தொகை ரூ.**25.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அ.கு–</u>

**1.** இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து செலவின தொகை ஏற்றும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** பொது சுகாதார பணியின் நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அடுத்த மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்ய பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1224, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–16

இந்நகராட்சியில் பயன்படுத்தப்படும் ஆணையர் ஈர்ப்பு வாகனம் எண்.TN.19 J 3325 என்ற வாகனத்திற்கு A/C பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.25000/–க்கு மன்ற பொருள் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3.

**தீர்மான எண்.1225, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–17

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து செங்கல்பட்டு நகருக்கு குடிநீர் விநியோகம் செய்ய கனிமம் மற்றும் சுரங்கம் (District Mines Foundation Trust) துறை மூலம் செங்கல்பட்டு நகராட்சிக்கு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.8218/mines/2021, நாள்.17.02.2021–ல் பணிக்கு 20.00 இலட்சம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மன்ற பொருள் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1226, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–18

செங்கல்பட்டு நகராட்சிக்கு எல்லைக்குப்பட்ட பகுதியில் அமைந்துள்ள வார்டு எண்.27 குண்டூர் பகுதி, வார்டு எண்.2 கரிமேடு ஆகிய இடங்களில் சமுதாய கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடம் ஆகியவற்றிக்கு ODF++ தரசான்று பெறுவதற்கு மதிப்பீடு ரூ.3.50/– இலட்சம் தயாரிக்கப்பட்டு கீழ்கண்ட விவரப்படியான பணிகள் எடுத்து செய்ய மன்ற அனுமதிக்காக.

1. வார்டு எண்.27 குண்டூர் சமுதாய கழிப்பிடம் மறாமரத்து பணிகள்
2. வார்டு எண்.2 கரிமேடு சமுதாய கழிப்பிடம் மறாமரத்து பணிகள்

மேற்படி பட்டியலில் குறிப்பிட்டுள்ள கழிப்பிடங்களை மறாமரத்து பணி செய்ய வேண்டி மன்ற பொருள் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1227, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–19

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் குத்தகை உரிமம் 31.03.2021 தேதியன்று முடிவடைகிறது. எனவே அரசானை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை நாள்.19.09.2008–ன் படி 2020–21 மற்றும் 2021–22–ம் ஆண்டு குத்தகை

உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடத்துவதற்கும் மற்றும் அதற்கான விளம்பர அறிக்கையினை தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்வதற்கான செலவினத் தொகை ரூ.50,000/– ம் அனுமதி வழங்க கோரி மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

குறிப்பு–

மேற்படி இறுதி ஆண்டு குத்தகை தொகை பட்டியலில் கீழ்கண்டவாறு

**இனங்கள்**

1. ஆடு அறுவை சாலை கட்டணம் தண்டும் உரிமம்
2. தினசரி கூலி விற்போரிடம் குத்தகை தண்டும் உரிமம்
3. லாரி வேண் கட்டணம் தண்டும் உரிமம்
4. புதிய பேருந்து நிலைய கட்டணம் கழிப்பிடம் தண்டும் உரிமம்
5. காய்கறி மார்க்கெட்டுக்கு வரும் சைக்கிள் ஸ்டாண்டு கட்டணம் தண்டும் உரிமம்.
6. திம்மாவரம் மாமரமகசூல் கட்டணம்

| இனம் | இறுதி ஆண்டு தொகை | அதிலிருந்து 5% | மொத்தம் | உயர்த்தப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | 132300 | 6615 | 138915 | 140000 |
| 2 | 1102499 | 55125 | 1157624 | 1160000 |
| 3 | 292163 | 14608 | 306771 | 308000 |
| 4 | 1719900 | 85995 | 1805895 | 1806000 |
| 5 | 14332 | 717 | 15049 | 15200 |
| 6 | 22160 | 1108 | 23268 | 24000 |

மேற்கண்ட பட்டியலில் உள்ள உயர்த்த பட்ச தொகையாக நிர்ணயம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.084/2018/அ2)

**தீர்மான எண்.1228, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–20

செங்கல்பட்டு நகராட்சியில் 15–வது நிதிக்குழு மான்ய நிதி 2020–21–ன் படி இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண்.2357/2020/இ1, நாள்.16.01.2021–ன் படி பொது சுகாதார பிரிவிற்க்கு வார்டு எண்.12 முதல் 21 வரையில் ‘B’ டிவிஷன் பகுதிக்கு மூன்று எண்ணிக்கை BOV (Battery

Operator Vehicle) வாங்க கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் 03.02.2021 அன்று கீழ்கண்ட விவரப்படியான ஒப்பந்தபுள்ளி மன்ற பார்வைக்கும் ஒப்புதலுக்கு.

| வ.எண் | ஒப்பந்தாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீடு விலை விகித்தின் விட கூடுதல் / குறைவு |
|---|---|---|
| 1 | M/S Sree bhairava green lines | 0.07% ம.வி குறைவு |
| 2 | M/S Shre vary Enterprises | 0.85% ம.வி அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.07% ம.வி குறைவு ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/S Sree bhairava green lines ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

அ.கு–

1. மன்றம் ஏற்கலாம்
2. பணியின் முக்கியத்தும் கருதி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

**தீர்மான எண்.1229, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–21

செங்கல்பட்டு நகராட்சியில் 15–வது நிதிக்குழு மான்ய நிதி 2020–21–ன் படி இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண்.2357/2020/இ1, நாள்.18.01.2021 பொது சுகாதார பிரிவிற்க்கு வார்டு எண்.22 முதல் 33 வரையில் ‘C’ டிவிஷன் பகுதிக்கு நான்கு எண்ணிக்கை BOV (Battery Operator Vehicle) வாங்க கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் 10.02.2021 அன்று கீழ்கண்ட விவரப்படியான ஒப்பந்தபுள்ளி மன்ற பார்வைக்கும் ஒப்புதலுக்கு.

| வ.எண் | ஒப்பந்தாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீடு விலை விகித்தின் விட கூடுதல் / குறைவு |
|---|---|---|
| 1 | M/S Sree bhairava green lines | 0.03% ம.வி குறைவு |
| 2 | M/S Shre vary Enterprises | 1.18% ம.வி அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% ம.வி குறைவு அளித்துள்ள M/S Sree bhairava green lines ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

அ.கு–

1. மன்றம் ஏற்கலாம்
2. பணியின் முக்கியத்தும் கருதி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

**தீர்மான எண்.1230, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–22

இந்நகராட்சி 2019–2020–ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை வருவாய் நிதி குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி ஆகியவற்றிக்கு ஒவ்வொன்றும் 5 புத்தகங்கள் Typing and printing charge and binding தணிக்கைகான ஆண்டுகள் முடித்து பணி முடித்தற்கான விலைப்புள்ளி வரப் பெற்றது.

1. Gsoft system - ரூ.1,50,000
2. Cursor solution - ரூ.1,52,000

மேற்படி வரப் பெற்ற இரண்டு விலைப்புகன் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. வரப் பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் Gsoft system அளித்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்க்கும் அதற்கான செலவின தொகைக்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.1231, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–23

செங்கல்பட்டு நகராட்சியின் வருவாய் நிதி குடிநீர் மற்றும் வடிகால் நிதி கல்வி நிதி 2021–2022–ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கை நகர மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்.1232, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–24

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை 31941/2018ன் 4.4.2019ம் தேதிய உத்தரவின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 40/2018) திருத்தம் செய்யப்பட்ட அட்டவணை V-ல் உள்ள உட்பிரிவு (ii) மற்றும் (iii) குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) பிரிவு 249–ன் படி முடித்திருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தவறாமல் உரிமம் பெற்று நடத்திட சட்ட திருத்தம் செய்து தமிழ்நாடு அரசிதழ் எண்.38 நாள்.31.01.2019ல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த சட்ட திருத்த வெளியீட்டினை அடிப்படையாக கொண்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19775/ஜெ2/2019–3, நாள்.15.12.2020ல் முடித்திருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தொழில் உரிமம் பெறுவதற்கு நாளிதழில் அறிவிப்பு பிரசுரம் செய்து நடைமுறைபடுத்தவும் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் முடித்திருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் இந்நகராட்சியில் விண்ணப்பம் சமர்பித்து தொழில் உரிமம் பெற்றுக் கொள்ளவும், தவறும் பட்சத்தில் தொழில், உரிமம் இன்றி செயல்படுவதாக கருதி நிலையம் நடத்துவோரும், நிலைய உரிமையாளரும் பொறுப்பானவராக கருதி நிலையத்தை மூடி முத்திரையிடுதல், உள்ளிட்ட அனைத்து சட்ட பூர்வ நடிவகைக்கைகளையும் மேற்கொள்ள தமிழ்நாடு சட்டம் V/1920 –ன் கீழ் மேற்கொள்ளப்படும் என நாளிதழில் அறிவிப்பு செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

இந்த அறிவிப்பினை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) நாளிதழில் பிரசுரம் செய்வதற்கான கட்டணத் தொகை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1233, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–25

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.01.2021–ம் தேதியிட்ட கடிதம் ந.க.எண்.4097/J2/2020–ல் அரசாணை எண் G.O.(MS)No.105 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையர் நாள்.19.10.2020–ன் படி ஒவ்வொரு நகராட்சியிலும் அவர்தம் பகுதிகளுக்குட்பட்ட இடங்களில் இறக்க நேரிடும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன

மக்களுக்கு ஈமச்சடங்கு உதவி தொகையாக இது வரை வழங்கப்பட்ட ரூ.2500/– லிருந்து ரூ.5000/– மாக உயர்த்தி வரப்பெற்றுள்ள அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1234, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–26

செங்கல்பட்டு நகராட்சி சொந்தமான குத்தகை இனங்களின் 2020–21–ம் ஆண்டு உரிமத்திற்காக 25.02.2021 தேதியன்று ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடத்தப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி உயர்ந்தபட்ச தொகை கோரியவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்க அனுமதிக்காக மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

இனம்:1

லாரி வேன் கட்டணம் தண்டும் உரிமம்

அ) ஒப்பந்தபுள்ளி – இரண்டு

1. விமலாபாய் Construction என்பவர்
   கோரிய தொகை ரூ.3,08,000/–
2. திரு.P.பெருமாள் என்பவர்
   கோரிய தொகை ரூ.3,10,000/–

ஆ) ஏலம் எவரும் கோரவில்லை

மேற்படி உயர்ந்தபட்ச தொகை ரூ.3,10,000/– (மூன்று இலட்சத்து பத்தாயிரம்) கோரியவர் திரு.P.பெருமாள் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இனம்: 2

காய்கறி மார்க்கெட்டுக்கு வரும் சைக்கிள் ஸ்டாண்டு கட்டணம் தண்டும் உரிமம்

அ) ஒப்பந்தபுள்ளி – இரண்டு

1. M. ரகு என்பவர் கோரிய தொகை ரூ.15,500/–
2. திரு.G.தங்கபாண்டியன் கோரிய தொகை ரூ.15,300/–

ஆ) ஏலம் எவரும் கோரவில்லை

மேற்படி உயர்ந்தபட்ச தொகை ரூ.15,500/– (பதினைந்தாயித்து ஐநூறு) கோரியவர் திரு.M.ரகு என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இனம்: 3

திம்மாவரம் மாமரமசூல் கட்டணம்

அ) ஒப்பந்தபுள்ளி – இரண்டு

1. திருமதி.A. வசந்தா என்பவர் கோரிய தொகை ரூ.24,100/–

2. திரு.A.புஷ்பராஜ் என்பவர் கோரிய தொகை ரூ.20,000/–

ஆ) ஏலம் எவரும் கோரவில்லை

மேற்படி உயர்ந்தபட்ச தொகை ரூ.24,100/– (இருபத்தி நான்காயிரத்து நூறு) கோரியவர் திருமதி.A.வசந்தா என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1235, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–27

செங்கல்பட்டு நகராட்சியில் மகப்பேறு ஆயாவாக பணிபுந்து ஓய்வு பெற்று 13.12.2016 அன்று காலமான திருமதி.தனலட்சுமி அவர்களின் மகள் திருமதி.Y.மோகனா என்பவர் தனக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க கோரி நகராட்சி மீது சென்னை உயர் நீதி மன்றத்தில் W.P எண்.2914/2021 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு இந்நகராட்சி சார்பில் எதிர் வழக்காட ரூ.15000/– அரசு வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிகு வைக்கப்படுகிறது.

<u>அ.கு–</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1236, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–28

செங்கல்பட்டு நகராட்சியில் பணிபுரியும் கீழ் கண்டுள்ள பிரிவுகளிலுள்ள கடைநிலை ஊழியர்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலணிகள் வழங்க வேண்டி உள்ளது. [தையல் கூலி உள்பட]

பிரிவு வாரியான விவரம்

| வ.எண் | பணியாளர்களின் விவரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர்கள் | 56 | 37 | 93 |
| 2 | துப்புரவு மேற்பார்வையாளர்கள் | 1 | 1 | 2 |
| 3 | ஒட்டுநர்கள் (ம) (பொறியாளர் பிரிவு) | 4+2 | - | 6 |
| 4 | அலுவலக உதவியாளர்கள் | 5 | 2 | 7 |
| 5 | இரவு காவலர் | 1 | - | 1 |
| 6 | மகப்பேறு உதவியாளர் | - | 1 | 1 |
| 7 | பொறியாளர் பிரிவு | 19 | - | 19 |
| | **மொத்தம்** | **88** | **41** | **129** |

மேற்படி செலவினத்திற்கு ஆகும் தோராய மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பதிவு பெற்ற அரசு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1237, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–29

செங்கல்பட்டு நகராட்சியில் 2021–2022 –க்கு அலுவலக அத்தியாவசிய பணிகளுக்கு தேவையான எழுதுப்பொருட்கள் மற்றும் பதிவேடுகள் தற்போது போதுமானளவு இருப்பில் இல்லாத காரணத்தால் அவசர அவசியனிமித்தம் பதிவு பெற்ற அரசு நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளிக் கோரி வாங்கவும் இதற்க்கான தோராயன செலவினம் ரூ.7,00,000/– ஏழு இலட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி பெற ஆணையர் ஒப்புதலுக்கு பணிந்தனுப்படுகிறது.

அ.கு–

1. அனுமதி அளிக்கலாம்
2.அத்தியாவசிய தேவை என்பதால் அவசர அவசியனிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை பெற்றுக்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1238, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–30

செங்கல்பட்டு நகராட்சிக்கு எல்லைக்குப்பட்ட பகுதியில் அமைந்துள்ள வார்டு எண்.27 குண்டூர் பகுதி, வார்டு எண்.2 கரிமேடு ஆகிய இடங்களில் சமுதாய கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடம் ஆகியவற்றிக்கு ODF++ தரசான்று பெறுவதற்கு பழுதுகள் பார்க்கும் பணிக்கு ரூ.3.50/– இலட்சத்திற்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதின்படி விவரம் பின் வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் விவரம் |
|---|---|---|---|
| 1 | எண்.27 குண்டூர் பகுதி, வார்டு எண்.2 கரிமேடு ஆகிய இடங்களில் | ரூ.3.50 இலட்சம் | K.வெங்கடேசலு 0.07% குறைவு |

| | | | |
|---|---|---|---|
| | சமுதாய கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடம் ஆகியவற்றிக்கு ODF++ தரசான்று பெறுவதற்கு பழுதுகள் பார்க்கும் பணி | | E.சந்திரன் 2.72% அதிகம் |

மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

<u>அ.கு–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1239, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–31

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15–ல் அமைந்துள்ள இரயில்வே நிலையத்தில் தினசரி பெரும்பாலான பயணிகள் வந்து செல்வதால் அங்கு அதிகமான குப்பை கழிவுகள் ஏற்படுவதாகவும், அதனை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டிய நிலையில் இருப்பதால், செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான 7–வது வார்டில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் கொண்டு வந்து கொட்டுவதற்கு உரிய அனுமதி வழங்குமாறு 15.02.2021–ல் இரயில்வே நிர்வாகத்தில் இருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

இதனை தொடர்ந்து துப்புரவு ஆய்வர் இவ்விதமான குப்பை கழிவுகளுக்கு டன் 1–க்கு ரூ.1500/– நிர்ணயம் செய்யலாம் என அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இவ்வறிக்கையினை ஏற்று இரயில்வே நிர்வாகத்தில் இருந்து வரும் மக்காத குப்பை கழிவுகளுக்கு 1 டன் ஒன்றுக்கு ரூ.1500/– என நிர்ணயிக்கவும், இவ்வாறான குப்பை கழிவுகளை அந்நிறுவனமே தனது சொந்த செலவில் நகராட்சி குப்பை கிடங்கில் கொண்டு வந்து சேர்க்கவும் உரிய விதிமுறைகளை பின்பற்றி உத்திரவிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1240, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–32

இந்நகராட்சி பணியாளர்களுக்கு 2021–2022 க்கு அலுவலகத்திற்கு தேவையான எழுதுப்பொருட்கள் (ம) பதிவேடுகள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் அவசர அவசியம் கருதி சப்ளை செய்ய பதிவு பெற்ற அரசு நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இதனை மன்றத்தின்பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | AA எண்டர் பிரைசஸ் | Annai sivagami womens maistrial co-ope socetyidele | ஜார்ஜ் டவுடன் பல்ளோக்கு தொழில் கூட்டுறவு சங்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | A4 paper | 1 No | 380.00 | 378.00 | 375.00 |
| 2 | A3 paper | 1 No | 480.00 | 478.00 | 475.00 |
| 3 | Bal pen | 1 No | 18.00 | 17.00 | 15.00 |
| 4 | 1 quir Register | 1 No | 235.00 | 232.00 | 230.00 |
| 5 | Stamp pad | 1 No | 129.00 | 132.00 | 128.00 |
| 6 | Gum Bottle | 1 No | 65.00 | 65.00 | 60.00 |
| 7 | wrapper sheet | 1 No | 12.00 | 12.00 | 10.00 |
| 8 | File Pad | 1 No | 100.00 | 105.00 | 98.00 |
| 9 | Toner 12 A | 1 No | 6510.00 | 6510.00 | 6500.00 |
| 10 | Toner 88 A | 1 No | 6220.00 | 6210.00 | 6200.00 |
| 11 | Chitta Register | 1 No | 1850.00 | 1890.00 | 1800.00 |
| 12 | Money value Register | 1 No | 560.00 | 575.00 | 550.00 |
| 13 | 15 days notice | 1 No | 4.10.00 | 4.10.00 | 4.00 |
| 14 | 3 days notice | 1 No | 5.30.00 | 5.50.00 | 5.20.00 |
| 15 | 7 days notice | 1 No | 5.30.00 | 5.50.00 | 5.20.00 |
| 16 | ஆட்டுத் தொட்டி டோக்கன் பில் | 1 No | 110.00 | 105.00 | 100.00 |
| 17 | லாரி வேண் டோக்கன் பில் | 1 No | 110.00 | 105.00 | 100.00 |
| 18 | Color Floppy | 1 No | – | – | – |
| 19 | Worker Attendance | 1 No | 620.00 | 605.00 | 600.00 |
| 20 | Worker late Attendance | 1 No | 620.00 | 605.00 | 600.00 |
| 21 | Cash book 100pq | 1 No | 125.00 | 125.00 | 120.00 |
| மொத்தம் | | | 17923.7 | 18669.1 | 17755.4 |

மேற்படி வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண்.2ல் உள்ள ஜார்ஜ் டவுன் பலநோக்கு கூட்டுறவு சங்கம் , சென்னை 600001 என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.அத்தியாவசிய தேவை என்பதால் அவசர அவசியனிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களையும் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கிகரீக்கலாம்.

**தீர்மான எண்.1241, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–33

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்றும் நிலையங்களில் புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைக்க இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண்.2296/2020/இ2, நாள்.22.12.2021–ன் 07.01.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளை ஒப்புநோக்கு கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பபர்வைக்கும் ஒப்புதலுக்கும்

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை இலட்சத்தில் | ஒப்பந்தாரர் பெயர் | மதிப்பீடு தொகை விட சதவீதம் கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி மாமண்டுர் நீரேற்றும் நிலையத்தில் பாலாறு படுகையில் கரை ஒரத்தில் புதியாக இரண்டு எண்ணிக்கை ஆழ்துளை கிணறு மற்றும் மோட்டார், கேபிள், பைப் அமைக்கும் பணி | ரூ.4.30 இலட்சத்தில் | திரு.ஆனந்த் எண்டர்பிரைசஸ் நிறுவனம் செங்கல்பட்டு | 0.45% சதவீகிதம் அதிகம் |
| | | | திரு.k.ராஜகோபாலன் ஒப்பந்தாரார் செங்கல்பட்டு | 0.15% சதவீகிதம் குறைவு |
| 2 | செங்கல்பட்டு நகராட்சி பழவேலி நீரேற்றும் நிலையத்தில் பாலாறு படுகையில் கரை ஒரத்தில் புதியாக மூன்று எண்ணிக்கை ஆழ்துளை கிணறு மற்றும் மோட்டார், கேபிள், பைப் அமைக்கும் பணி | ரூ.4.36 இலட்சத்தில் | திரு.அப்பல்லோ எண்டர்பிரைசஸ் மறைமலைநகர் | 0.05% சதவீகிதம் குறைவு |
| | | | திரு.ஆனந்த் எண்டர்பிரைசஸ் செங்கல்பட்டு | 0.08% சதவீகிதம் அதிகம் |

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் விநியோகப் பணி என்பதால் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1242, நாள்26.02.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையர்
செங்கல்பட்டு நகராட்சி